


தமிழ் மக்கள் குரல்
tamilmakkalkurall@gmail.com
தினசரி காலை நாளிதழ்
RNI No. : TNTAM24840
உள்ளது உள்ளபடி




மலர் 3 சென்னை | தினசரி | 4 பக்கம் சனி, ஆகஸ்ட் 29, 2026 இதழ் 138

## சாலையில் மக்கள் திரண்டிருந்து உற்சாக வரவேற்பு, சென்னை புழல் சிறை, காவல் நிலையத்தில்முதல்வர் விஜய் ஆய்வு. சிறைச்சாலையில் வசதிகள், பாதுகாப்பு பற்றி கேட்டறிந்தார்

சென்னை, 29 ஆகஸ்ட் 2026: சென்னை புழலில் உள்ள மத்திய சிறைச் சாலைக்கு இன்று திடீரென நேரில் சென்று முதலமைச்சர் விஜய் ஆய்வு செய்தார். மத்திய சிறைச்சாலையில் ஆய்வு நடத்திய பின்னர் அருகில் இருந்த புழல் (எம்-3) காவல் நிலையத்திற்கும் முதலமைச்சர் சென்று ஆய்வு மேற்கொண்டார்.

முதலமைச்சர் அங்கு வந்ததை அறிந்ததும், ஆயிரக்கணக்கான மக்கள் அங்கு திரண்டு நின்று முதல்வரை கையசைத்து ஆரவாரம் செய்து வரவேற்றார்கள். அவர்களுக்கு முதல்வரும் சிரித்துக்கொண்டே கையசைத்தும், வணக்கம் தெரிவித்தும் மகிழ்ச்சி தெரிவித்தார்.

சென்னை புழல் சிறையில் மத்திய விசாரணை சிறை, தண்டனை சிறை, மகளிர் சிறை என 3 சிறைகள் உள்ளன. இங்கு 4 ஆயிரத்திற்கும் மேற்பட்ட கைதிகள் உள்ளனர்.

இந்த நிலையில் சென்னை புழலில் அமைந்துள்ள மத்திய சிறைச்சாலையில் முதலமைச்சர் விஜய் திடீர் ஆய்வு மேற்கொண்டார். திடீரென மத்திய சிறைச்சாலை வளாகத்தில் வந்து இறங்கிய முதல்வரைப் பார்த்ததும் அங்கிருந்தவர்கள் ஆச்சரியம் அடைந்தனர். சிறையில் அடைக்கப்பட்டுள்ள கைதிகளின் நிலை மற்றும் அங்குள்ள வசதிகள் குறித்து முதலமைச்சர் விஜய் கேட்டறிந்தார். முதலில், மகளிர் சிறைக் கூடத்தில் உள்ள வசதிகள் குறித்து ஆய்வு நடத்திவிட்டு பிறகு ஆண்கள் அடைக்கப் பட்டிருக்கும் வளாகத்துக்கு முதல்வர் சென்றார்.

கைதிகளுக்கு வழங்கப்படும் உணவு

சிறையில் கைதிகளுக்கு வழங்கப் படும் உணவு, உணவு தயாரிக்கப்படும் கூடம், மருத்துவ வசதிகள் என அனைத்தையும் முதல்வர் நேரில் சென்று ஆய்வு நடத்தினார்.

மேலும், சிறைத் துறை அதிகாரிகளிடம் சிறையின் செயல்பாடுகள், கைதிகளின் நலன் மற்றும் பாதுகாப்பு நடவடிக்கைகள் குறித்து முதலமைச்சர் கேட்டறிந்தார். சிறையில் மேற்கொள்ளப்பட்டு வரும் மேம்பாட்டுப் பணிகள் குறித்தும் அதிகாரிகளுடன் அவர் ஆலோசனை நடத்தினார். அப்போது தமிழக உயர் அதிகாரிகள், சிறைத்துறை




அதிகாரிகள் உடனிருந்தனர்.

முதல்வர் விஜய், புழல் சிறைக்கு வந்திருக்கும் நிலையில், அங்கு பாதுகாப்பு ஏற்பாடுகள் அதிகரிக்கப்பட்டிருந்தன. இதனால் அப்பகுதியில் சற்று போக்குவரத்து நெரிசலும் ஏற்பட்டது. பாதுகாப்பு நடவடிக்கையாக புழல் சிறையில் அடைக்கப் பட்டுள்ள கைதிகளைப் பார்க்க வந்த உறவினர் கள், கைதிகளைப் பார்க்கும் வளாகத் துக்குள் அனுமதிக்கப் படவில்லை.

புழல் காவல் நிலையத்தில் ஆய்வு

சிறைச்சாலையில் ஆய்வு நடத்திய பின் புழல் சிறை அருகில் உள்ள எம் 3 காவல் நிலையத்திற்கும முதலமைச்சர் விஜய் திடீரென சென்று ஆய்வு செய்தார். அங்கிருந்த ஆவணங்களை எல்லாம் பார்த்தார். அங்கிருந்த போலீஸ் அதிகாரிகளிடம் விவரங்களையும், விளக்கங்களையும் முதலமைச்சர் கேட்டார். அதன்பின் அங்கிருந்து புறப்பட்டு சென்றார்.

முயூலமைச்சர் அங்கு வருவதை அறிந்ததும், ஆயிரக்கணக்கான மக்கள் கொளுத்தும் வெயிலையும் பொருட் படுத்தாமல் திரண்டார்கள். முதலமைச்சர் போலீஸ் நிலையத்திலிருந்து வெளியே சிறிது தூரம் நடந்தே வந்தார். அப்போது அங்கிருந்தவர்கள் வாழ்த்து கோஷம் எழுப்பி ஆரவாரம் செய்தார்கள். அவர்களை பார்த்து, முதலமைச்சர் கைகளை அசைத்தவாறு மகிழ்ச்சி தெரிவித்தார். அவர் காரில் ஏறுவதற்கு நடந்து சென்றபோது சாலையின் இருபக்கமும் இருந்த மக்கள் முதலமைச்சரை பார்க்க ஓடோடி வந்தனர். முதலமைச்சர் பின்னர் காரில் ஏறி புறப்பட்டார். அப்போதும் சாலை ஓரம் திரண்டிருந்த மக்களை பார்த்து, காரில் மெதுவாக சென்று அவர்களது அன்பு வரவேற்பை மகிழ்ச்சியுடன் பெற்றுக் கொண்டு புறப்பட்டார்.

## காவல் துறை, தீயணைப்பு மற்றும் மீட்புப்பணிகள் துறை சார்பில் ரூ.164.64 கோடியில் புதிய கட்டிடம்: முதல்வர் விஜய் திறந்து வைத்தார்

சென்னை, 29 ஆகஸ்ட் 2026: காவல் துறை, தீயணைப்பு மற்றும் மீட்புப்பணிகள் துறை சார்பில் ரூ.164.64 கோடி செலவில் புதிதாக கட்டப்பட்டுள்ள கட்டிடங்களை முதல்வர் விஜய் நேற்று திறந்து வைத்தார். செங்கல்பட்டு மாவட்டம், பெரும்பாக்கத்தில் ரூ.121 கோடியே 85 லட்சம் செலவில் கட்டப்பட்டுள்ள 400 காவலர் மற்றும் தலைமைக் காவலர் குடியிருப்புகள், சென்னை மாவட்டம், துறைமுகத்தில் ரூ.2 கோடியே 91 லட்சம் செலவில் கட்டப்பட்டுள்ள காவல் நிலையம், சென்னை மாவட்டம், ஆவடி, தமிழ்நாடு சிறப்புக் காவல்படை 5ம் அணி வளாகத்தில் ரூ.1 கோடி செலவில் கட்டப்பட்டுள்ள காவலர் பல் பொருள் அங்காடி மற்றும் புனித தோமையார் மலை ஆயுதப் படை வளாகத்தில் ரூ.1 கோடி செலவில் கட்டப்பட்டுள்ள காவலர் பல்பொருள் அங்காடி, காஞ்சிபுரம் மாவட்டம், காஞ்சிபுரம் ஆயுதப்படை



வளாகத்தில் ரூ.1 கோடி செலவில் கட்டப்பட்டுள்ள காவலர் பல் பொருள் அங்காடி என மொத்தம் ரூ.127 கோடியே 76 லட்சம் செலவில் கட்டப்பட்டுள்ள காவல் துறைக் கட்டிடங்களை திறந்து வைத்தார்.

இதேபோல் ரூ.36 கோடியே 88 லட்சம் செலவில் கட்டப்பட்டுள்ள தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறைக் கட்டிடங்களை முதல்வர் திறந்து வைத்தார்.

இந்நிகழ்ச்சியில், தலைமைச் செயலாளர் சாய்குமார், உள்துறை செயலாளர் மணிவாசன், காவல்துறை தலைமை இயக்குநர் மகேஷ் குமார் அகர்வால் உள்ளிட்ட அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

## சட்டமன்றம் நடைபெறும் போது அதிகாரிகள் அவையில் உள்ளே அமர வேண்டும்: சபாநாயகர் ஜே.சி.டி.பிரபாகர் உத்தரவு

சென்னை 29, ஆகஸ்ட் 2026: தமிழக சட்டப்பேரவையில் எதிர்கட்சி தலைவர் உதயநிதி ஸ்டாலின் பேசியதாவது: என் வேண்டுகோள். இந்த கேள்வி நேரம் நடக்கும் போது, அந்தத் துறையின் செயலாளர்கள் இந்த அவைக்கு வர வேண்டும். அவர்கள் அதை குறிப்பு எடுத்துக் கொள்ள வேண்டும். அதையும் நீங்கள் வலியுறுத்த வேண்டும். அதேபோல, கவன ஈர்ப்பு தீர்மானத்தைக் கொடுத்துள்ளோம். அனைத்துக் கட்சித் தலைவர்களும் கொடுத்துள்ளார்கள். ஆனால், நாங்கள் கவன ஈர்ப்பு தீர்மானத்தைக் கொண்டு வருவதற்கு முன்பாகவே, ஒரு அமைச்சர் இதற்கு விளக்கம் சொல்ல வேண்டும் என்று சொல்கிறார். அதையும் நீங்கள் அனுமதிக்கிறீர்கள். உடனே கரூர் சம்பவத்துடன் ஒப்பிடுகிறீர்கள். எனவே, அது சரியாக இருக்குமா என்று தெரியவில்லை.

ஏனென்றால், கரூர் சம்பவம் நடக்கும் போது, இங்கு அவையில் முதல்வரே இருந்து பதில் சொன்னார். இப்போது முதல்வரும் இல்லை, தலைமைச் செயலாளரும் இல்லை. எனவே, இதையெல்லாம் நீங்கள் கவனத்தில் கொண்டு துறை பிரச்னை வரும்போது, அந்தந்தத் துறையின்



அதிகாரிகள் இங்கு இருக்க வேண்டும் என்று நீங்கள் அறிவுறுத்த வேண்டும். இவ்வாறு அவர் பேசினார். பொதுப்பணித் துறை அமைச்சர் ஆதவ் அர்ஜூனா: முன்பு இருந்த நடைமுறை வேறு. சட்டமன்றம் நேரலையில் செல்கிறது. பக்கத்து அறையில் வார் ரூம் இருக்கிறது. அங்கு அனைத்து செயலாளர்கள் அமர்ந்து இருக்கிறார்கள். நேரலையில் பார்த்து கொண்டிருக்கிறார்கள். கே.என் நேரு (திமுக): நேரலை எப்போதும் இருப்பது தான்.

சிலவற்றை நாம் வெளியிடுவதில்லை. துறை செயலாளர்கள் இங்கு இருக்க வேண்டும். இங்கு இருந்தால் அவர்கள் குறிப்பு எடுத்துக்கொள்வார்கள். முடியும் என்றால் முடியும், இல்லை என்றால் இல்லை என கூறுங்கள். துறைசெயலாளர்கள் அவசியம் இருக்க வேண்டும். முதல்வர் இல்லை என்றால் தலைமைச் செயலாளராவது இருக்க வேண்டும். சபாநாயகர் ஜேசிடி. பிரபாகர்: கடந்த காலத்திலும் திமுக ஆட்சியிலும் இது போன்று நடைபெற்றுள்ளது. இதுகுறித்து ஏற்கனவே முன்னாள் அமைச்சர் அவை முன்னவர் துரை முருகன் பேசியதை அவைக்கு படித்துக் காண்பித்தார். முன்பு நடந்தது போல் இல்லாமல் அதிகாரிகள் இருக்கையில் அமர வேண்டும். இவ்வாறு விவாதம் நடந்தது.

## தில்லி லோக் கல்யான் மார்க் பகுதியில் அமைந்துள்ள பிரதமர் இல்லத்தில் நடைபெற்ற ரக்ஷா பந்தன் கொண்டாட்ட நிகழ்ச்சிகளின் சில பதிவுகளைப் பிரதமர் பகிர்ந்துள்ளார்

சென்னை 29, ஆகஸ்ட் 2026: பிரதமர் திரு நரேந்திர மோடி தில்லியில் உள்ள எண்: 7 லோக் கல்யான் மார்க் என்ற முகவரியில் அமைந்துள்ள தனது இல்லத்தில் நடைபெற்ற ரக்ஷா பந்தன் கொண்டாட்ட நிகழ்ச்சிகளின் சில முக்கியப் பதிவுகளை பகிர்ந்து கொண்டுள்ளார். இந்தப் பண்டிகை மக்களிடையே பாசத்தையும், நல்லிணக்கத்தையும் மேலும் வலுப்படுத்துவதுடன் அனைவருக்கும் மகிழ்ச்சி, வளம் ஆகியவற்றைக் கொண்டு வர வேண்டுமென்று பிரதமர் வாழ்த்துத் தெரிவித்துள்ளார்.

சமூக ஊடக எகஸ் தளத்தில் பிரதமர் வெளியிட்டுள்ள வாழ்த்துச் செய்தியில் பதிவிட்டிருப்பதாவது:

தில்லியில் உள்ள எண்.7 லோக் கல்யான் மார்க் இல்லத்தில் நடைபெற்ற ரக்ஷா



பந்தன் கொண்டாட்ட நிகழ்ச்சியில் சில பகுதிகள் என்றென்றும் மறக்க முடியாத தருணங்கள்.

இந்தப் பண்டிகை பாசத்தையும், நல்லிணக்கத்தையும் மேலும் வலுப்படுத்தட்டும்.

இது, அனைவருக்கும் மகிழ்ச்சியையும், வளத்தையும் கொண்டு வரட்டும்.



## கோட்டக் பிஸ்லாப்ஸ் சீசன் 3 தனது தேசிய அளவிலான தடத்தை விரிவுபடுத்துகிறது, 100க்கும் மேற்பட்ட ஸ்டார்ட்அப்களுக்கு ஆதரவளிக்கவுள்ளது

கோயம்புத்தூர் 29, ஆகஸ்ட் 2026: கோட்டக் மஹிந்திரா வங்கி லிமிடெட் ("கேஎம்பிஎல்" / "கோட்டக்"), ஆரம்ப வருவாய் ஈட்டும் நிலையில் உள்ள ஸ்டார்ட்அப் நிறுவனங்களுக்கான தனது முதன்மை சமூகப் பொறுப்புணர்வுத் திட்டமான கோட்டக் பிஸ்லாப்ஸ் ஆக்சிலரேட்டர் திட்டத்தின் சீசன் 3-ஐ இன்று அறிவித்தது. சீசன் 3, ஆகஸ்ட் 2026 முதல் அக்டோபர் 2027 வரை செயல்படும். இது வழிகாட்டுதல், சுற்றுச்சூழல் அமைப்புக்கான அணுகல் மற்றும் ஊக்கமளிக்கும் நிதி ஆகியவற்றின் மூலம் இந்தியா முழுவதும் உள்ள 100-க்கும் மேற்பட்ட ஸ்டார்ட்அப் நிறுவனங்களுக்கு ஆதரவளிக்கும்.

சீசன் 3 ஐந்து இன்குபேஷன் பார்ட்னர்களை ஒன்றிணைக்கிறது: ஐஐஎம் கல்கத்தா இன்னோவேஷன் பார்க், சிஐஐஇ முன்முயற்சிகள் (ஐஐஎம்ஏ வென்ச்சர்ஸ்), ஐஐஎம் பெங்களூரில் ஐஐஎம் பிஏ/ என்எஸ்ஆர்சிஇஎல், ஐஐடி டெல்லியில் டி-ஹப் மற்றும் எஃப்ஐடிடி.

தொடங்கப்பட்டதிலிருந்து, கோட்டக் பிஸ்லாப்ஸ் ஆக்சிலரேட்டர் திட்டம் இந்தியா முழுவதிலும் உள்ள ஸ்டார்ட்அப் நிறுவனங்களிடமிருந்து 4,500-க்கும் மேற்பட்ட விண்ணப்பங்களைப் பெற்று, அதிக ஆற்றல் வாய்ந்த 125-க்கும் மேற்பட்ட நிறுவனங்களை ஊக்குவித்து, 100-க்கும் மேற்பட்ட ஸ்டார்ட்அப் நிறுவனங்களுக்கு மானியங்களை வழங்கியுள்ளது. இதன் மூலம், நிறுவனர்கள் புதுமையான மற்றும் தாக்கத்தை ஏற்படுத்தும் தீர்வுகளை விரிவுபடுத்த முடிகிறது.

“வளர்ச்சிக்கு உகந்த யோசனைகளைக் கொண்ட தொழில் முனைவோருக்கு, கட்டமைக்கப்பட்ட சூழல் அமைப்பு ஆதரவு பெரும்பாலும் கிடைக்காத பிராந்தியங்களுக்கு, சீசன் 3 உயர்தர ஆதரவைக் கொண்டு செல்கிறது. மிமிவி கல்கத்தா இன்னோவேஷன் பார்க் உடனான எங்கள் கூட்டாண்மை, கிழக்கு மற்றும் வடகிழக்கு இந்தியா முழுவதும் எங்கள் அணுகலை விரிவுபடுத்துவதோடு, கோட்டக் பிஸ்லேப்ஸை பிராந்திய ஸ்டார்ட்அப் மையங்களின் பரந்த வலையமைப்புடன் இணைக்கிறது. பங்கேற்கும் ஒவ்வொரு ஸ்டார்ட்அப்பும் அதன் அடுத்த கட்டத்திற்குச் செல்லத் தேவையான வழிகாட்டுதல், வலையமைப்புகள் மற்றும் நிதி ஆதரவைப் பெறுவதை உறுதி செய்வதே எங்கள் இலக்காகும்,” என்று கோட்டக் மஹிந்திரா வங்கி லிமிடெட்டின் சிஎஸ்ஆர் & இஎஸ்ஜி தலைவர் ஹிமான்ஷு நிவ்சர்க்கர் கூறினார்.




சீசன் 3, வேளாண் தொழில்நுட்பம், கால நிலை தொழில்நுட்பம், நிதித் தொழில்நுட்பம், நிலைத்தன்மை, சுணூராதாரத் தொழில்நுட்பம், கல்வித் தொழில்நுட்பம், தூய்மையான ஆற்றல், கழிவு மேலாண்மை மற்றும் நிலையான உற்பத்தி போன்ற துறைகளில் கவனம் செலுத்துவதோடு, ஆழ் தொழில்நுட்பத்தில் ஒரு சிறப்பு முக்கியத்துவத்தையும் கொண்டிருக்கும். ஐந்து அடைகாப்பு மையங்கள் முழுவதும், பங்கேற்கும் புத்தொழில் நிறுவனங்கள் வழிகாட்டுதல், தொழில் துறைத் தொடர்புகள் மற்றும் வளர்ச்சி ஆதரவைப் பெறும்; அந்தந்த அடைகாப்பகங்கள் குழுத் தேர்வு மற்றும் வளர்ச்சியை விரைவுபடுத்துவதை நிர்வகிக்கும்.

கோட்டக் பிஸ்லாப்ஸ் ஆக்சிலரேட்டர் திட்டம் என்பது கோட்டக் மஹிந்திரா வங்கி லிமிடெட்டின் ஒரு பெருநிறுவன சமூகப் பொறுப்புணர்வு முன்னெடுப்பு ஆகும்.

சீசன் 3-க்கான விண்ணப்பங்கள், டிபிஐஐடி-ஆல் அங்கீகரிக்கப்பட்ட ஸ்டார்ட்அப் நிறுவனங்களுக்கு இப்போது திறக்கப்பட்டுள்ளன. தகுதியுள்ள ஸ்டார்ட்அப் நிறுவனங்கள், கோட்டக் பிஸ்லாப்ஸ் சீசன் 3 விண்ணப்பப் பக்கம் வழியாக விண்ணப்பிக்கலாம்.

விண்ணப்பிக்க, இங்கே கிளிக் செய்யவும் -Https://kotakbizlabs.accubat.app/ext/form/24005/1/apply

## பாரதம் ரக்ஷா பந்தன் 2026-ஐ கொண்டாடுகிறது: மெட்ரோ அல்லாத இந்தியாவும் சிறு விற்பனையாளர்களும் திருவிழாவை முன்னெடுக்க, மீஷோவில் 36% ஆர்டர் வளர்ச்சி

சென்னை 29, ஆகஸ்ட் 2026: கடந்த ஒரு மாதத்தில், மீஷோவில் ரக்ஷா பந்தன் ஷாப்பிங் வேகம் பெற்றது. கடந்த ஆண்டு இதே ரக்ஷா பந்தன் ஷாப்பிங் கால கட்டத்துடன் சூப்பிடும் போது, தளம் ~36% ஆர்டர் வளர்ச்சியையும், ~38% ஜிஎம்வி வளர்ச்சியையும் பதிவு செய்துள்ளது.

இ-காமர்ஸ் இந்தியாவின் சிறு நகரங்களுக்குள் ஆழமாக விரிவடைகிறது

இந்த ஆண்டு அனைத்து ரக்ஷா பந்தன் ஆர்டர்களிலும் ~73% மெட்ரோ அல்லாத இந்தியாவிலிருந்தே வந்துள்ளன. இது, இந்தியாவின் மிகப் பெரிய நகரங்களைத் தாண்டி, திருவிழா இ-காமர்ஸ் வளர்ச்சியை சிறு நகரங்கள் எவ்வளவு வலுவாக முன்னெடுக்கின்றன என்பதை எடுத்துக்காட்டுகிறது. மூன்றாம் நிலை மற்றும் நான்காம் நிலை சந்தைகளிலிருந்தே வேகமான வளர்ச்சி பதிவானது. உத்தரப் பிரதேசத்தின் சிறிய தொழில்துறை நகரமான தாத்ரி, ~105% ஆண்டுக்கு ஆண்டு வளர்ச்சியுடன் முன்னிலை வகித்தது; அதைத் தொடர்ந்து நபரங்கபூர் (ஒடிசா), காஸ்கஞ்ச், தம்தாரி மற்றும் நைன்பூர் (மத்தியப் பிரதேசம்) ஆகிய இடங்கள் இடம்பெற்றுள்ளன.

அதிகமான விற்பனையாளர்கள் திருவிழா காலத்தை நம்பியிருக்க, முன்பணம் செலுத்தும் முறை ஏற்பு அதிகரிக்கிறது

கட்டண நடத்தை தொடர்ந்து மாறி வருகிறது; இந்த சீசனில் 58% ரக்ஷா பந்தன் ஆர்டர்கள் முன்பணம் செலுத்தும் முறைகள் மூலம் செய்யப்பட்டுள்ளன. இது மீஷோவில் ஷாப்பிங் செய்வதில் வாடிக்கையாளர் நம்பிக்கை வளர்ந்து வருவதைப் பிரதிபலிக்கிறது. திருவிழா வாய்ப்பு மேலும் பல வணிகங்களை தளத்திற்கு ஈர்த்தது; ரக்ஷி தயாரிப்புகளை வழங்கும் விற்பனையாளர்களின் எண்ணிக்கை ஆண்டுக்கு ஆண்டு 72% வளர்ச்சி கண்டது. இந்தியா முழுவதும் பல சிறு வணிகங்களும் தொழில் முனைவோர்களும் இந்த சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி தங்கள் பட்டியலை விரிவுபடுத்தி, திருவிழா தேவையைப் பயன்படுத்திக் கொண்டனர்.

## அமெரிக்காவின் ‘ஜேவலின்’ ரக டேங்க் எதிர்ப்பு ஏவுகணைகளை வாங்குவதற்கான ஒப்பந்தத்தில் இந்தியா கையெழுத்து

சென்னை, 29 ஆகஸ்ட் 2026: அமெரிக்காவின் ‘ஜேவலின்’ ரக டேங்க் எதிர்ப்பு ஏவுகணைகளை வாங்குவதற்கான ஒப்பந்தத்தில் இந்தியா கையெழுத்திட்டுள்ளது. ஆர்டிஎக்ஸ் மற்றும் Lockheed Martin நிறுவனங்கள் தயாரிக்கும் இந்த நவீன ஏவுகணைகள், எதிரிகளின் டேங்குகள் மற்றும் கவச வாகனங்களை அழிக்கப் பயன்படுத்தப்படுகின்றன.

இந்த ஒட்டுமொத்த பாதுகாப்பு தொகுப்பின் மதிப்பு சுமார் 93 மில்லியன் டாலர் (இந்திய மதிப்பில் சுமார் ரூ.825 கோடி) ஆகும். அவசர கால கொள்முதல் திட்டத்தின் கீழ், இந்திய ராணுவம் 104 ஜேவலின் கூவுகணைகளையும் 12 லாஞ்சர்களையும் (Launchers) வாங்க திட்டமிட்டுள்ளது.



இந்த ஏவுகணை கொள்முதல் ஒப்பந்தம், எதிர்காலத்தில் இந்தியாவிலேயே இந்த ஏவுகணைகளை இருநாடுகளும் இணைந்து தயாரிப்பதற்கான (Co-production) வாய்ப்புகளையும் ஏற்படுத்தும் என அமெரிக்க தூதர் தெரிவித்துள்ளார். இந்த நவீன ஜேவலின் கூவுகணைகள் அமெரிக்காவின் லாக்ஹீட் மார்ட்டின் மற்றும் ஆர்டிஎக்ஸ் (ஆர்டிஎக்ஸ்) நிறுவனங்களின் கூட்டு முயற்சியில் தயாரிக்கப்படுபவை ஆகும்.

ஜேவலின் என்பது மனிதர்கள் எளிதில் தூக்கிச் சென்று இலக்குகளைத் தாக்கக்கூடிய (Portable) ஒரு அதி நவீன பீரங்கி எதிர்ப்பு ஏவுகணை அமைப்பாகும். இது எல்லையோரப் பகுதிகளில் இந்தியாவின் பாதுகாப்புத் திறனை நவீனப்படுத்தவும், பிராந்திய அச்சுறுத்தல்களை திறம்பட எதிர்கொள்ளவும் இந்திய ராணுவத்திற்கு பெரும் பலம் சேர்க்கும்.

## அரசுப் பள்ளிகளை சீரமைக்காமல் போட்டி தேர்வுகளுக்கு இலவச ஆன்லைன் பயிற்சியா.!! பிரதமருக்கு ஜெய்ராம் ரமேஷ் கேள்வி...

சென்னை, 29 ஆகஸ்ட் 2026: போட்டித் தேர்வுகளுக்குத் தயாராகும் மாணவர்களுக்கு இலவச இணையவழிப் பயிற்சி வழங்கப்படும் என்ற பிரதமர் மோடியின் அறிவிப்பை காங்கிரஸ் கடுமையாக விமர்சித்து உள்ளது. இது பொறுப்பு ஏற்பதில் இருந்து தப்பிப்பதற்கான ஒன்றிய அரசின் ஒரு தந்திரம் என்று சாடி உள்ளது.

இது தொடர்பாக கருத்து தெரிவித்துள்ள காங்கிரஸ் கட்சியின் மூத்த தலைவரான ஜெய்ராம் ரமேஷ், இத்தகைய திட்டத்தை வெற்றிகரமாகச் செயல்படுத்தும் திறன் அரசிடம் இல்லை என்றும் குற்றம் சாட்டி உள்ளார். எனவே இந்த அறிவிப்பு கல்வித்துறையின் உண்மையான பிரச்சினைகளை தீர்க்காமல் திசைதிருப்பும் ஒரு "ஏமாற்று வேலை" என்று அவர் கூறியுள்ளார்.

கோட்டாவில் நடந்த ஒரு கூட்டத்தில், இந்தியக் குடும்பங்கள் பொதுக் கல்வியை விட 2.5 மடங்கு அதிகப் பணத்தைத் தனியார் பயிற்சி மையங்களுக்குச் செலவிடுகிறார்கள் என்று எங்கள் தலைவர் ராகுல் காந்தி சுட்டிக் காட்டியிருந்தார். இதற்கு ஆதரவாக பொதுமக்களிடம் எழுந்த கருத்துக்களுக்கு பயந்தே பிரதமர் இந்த அறிவிப்பை வெளியிட்டுள்ளார் என்றும்



ஜெய்ராம் ரமேஷ் கூறி உள்ளார். அதே போல பள்ளிகளையும், பல்கலைக்கழகங்களையும் தரம் உயர்த்துவதற்குப் பதிலாக, ஆன்லைன் பயிற்சி உள்கட்டமைப்பிற்குப் பொதுப் பணத்தை பயன்படுத்த முனைவது தவறானது என்றும் குறிப்பிட்டுள்ளார்.

## அமெரிக்கா கிராண்ட் செஸ் டூர் போட்டியில் சாம்பியன் பட்டம் வென்றார். விடாமுயற்சிக்கு கிடைத்த வெற்றி: பிரக்ஞானந்தாவுக்கு விஜய் வாழ்த்து

சென்னை, 29 ஆகஸ்ட் 2026: அமெரிக்காவில் நடைபெற்ற கிராண்ட் செஸ் டூர் 2026 போட்டியில் சாம்பியன் பட்டம் வென்ற தமிழ்நாட்டின் இளம் கிராண்ட் மாஸ்டர் பிரக்ஞானந்தாவை முதலமைச்சர் விஜய் பாராட்டி வாழ்த்து தெரிவித்துள்ளார். அமெரிக்காவில் நடந்து வரும் கிராண்ட் செஸ் டூர் இறுதிப் போட்டியில் தமிழகத்தைச் சேர்ந்த இந்திய வீரர் பிரக்ஞானந்தா சாம்பியன் பட்டம் வென்றார். இதன்மூலம் கிராண்ட் செஸ் டூரில் பட்டம் வென்ற முதல் இந்தியர் என்ற பெருமையை பெற்றுள்ளார்.

இந்த நிலையில் கிராண்ட் மாஸ்டர் பிரக்ஞானந்தாவைப் பாராட்டி முதலமைச்சர் விஜய் வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவில் கூறியிருப்பதாவது:

அமெரிக்காவின் செயின்ட் லூயிஸில் நடைபெற்ற கிராண்ட் செஸ் டூர் 2026 போட்டியில் சாம்பியன் பட்டம் வென்ற முதல் இந்தியர் என்ற வரலாற்றுச் சாதனையைப் படைத்துள்ள தமிழ்நாட்டின் இளம் கிராண்ட் மாஸ்டர் திரு. பிரக்ஞானந்தா அவர்களுக்கு எனது மனமார்ந்த பாராட்டுகளையும், நல்வாழ்த்துகளையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

உலகின் தலைசிறந்த வீரர்களுடன் ரூடைபெற்ற போட்டிகளில், அபாரமான மன உறுதியுடனும், மதிநுட்பத்துடனும் விளையாடி சாம்பியன் பட்டத்தை வென்றிருப்பது அவரது அசாதாரண ஆற்றலுக்கும், விடாமுயற்சிக்கும் கிடைத்த



அங்கீகாரமாகும்.

இந்த மகத்தான வெற்றி, இளம் தலைமுறையினருக்குப் புதிய நம்பிக்கையையும் உத்வேகத்தையும் அளிப்பதோடு, தமிழ்நாட்டிற்கும் இந்தியாவிற்கும் பெருமை சேர்த்துள்ளது. உலக அரங்கில் மேலும் பல சாதனைகளைப் படைக்க பிரக்ஞானந்தாவை மனமார வாழ்த்துகிறேன். இவ்வாறு முதலமைச்சர் விஜய் கூறியுள்ளார்.

"printed by S.MYTHILI and published by S.MYTHILI on behalf of S.MYTHILI and printed at Chennai Offset Printers No.19/1, 21/2, Kitabath Khan Bhandur street, Ellis Road, Chennai-600 002, and published at No.11, South Perumal Koil Street, Vadapalani, Chennai - 600 026 Editor S.MYTHILI"

## 'டெக்ஸாஸ் டைகர்' திரைப்படத்தின் முதல் பாடலான 'டைகரியன் ரோர்' பாடலில் ஹிருது ஹரூனின் எனர்ஜியும் கண்கவர் நடனமும் ரசிகர்களை கவர்ந்துள்ளது!

சென்னை, 29 ஆகஸ்ட் 2026: 'டெக்ஸாஸ் டைகர்' திரைப்படத்தின் முதல் சிங்கிளான 'டைகரியன் ரோர்' பாடல் வெளியாகியுள்ளது. குறிப்பாக, பாடலில் ஹிருது ஹரூனின் வசீகரிக்கும் திரையிருப்பு, தொற்றிக் கொள்ளும் உற்சாகம் மற்றும் எனர்ஜிட்டிக்கான நடனம் போன்றவை ரசிகர்களை வெகுவாகக் கவர்ந்துள்ளன. 'தக்ஸ்' திரைப்படத்தின் மூலம் கதாநாயகனாக அறிமுகமான ஹிருது ஹரூன், மிகக் குறுகிய காலத்திலேயே தமிழ், மலையாளம் மற்றும் இந்தி திரையுலகில் பல்வேறு கதாபாத்திரங்களில் நடித்து தனது திறமையை வெளிப்படுத்தியுள்ளார்.

'மும்பைகர்', 'ஆல் வீ இமேஜின் அஸ் லைட்', 'முரா', 'மைனே பியார் கியா', 'பேட் கேர்ள்', 'டியூட்' உள்ளிட்ட படங்களில் மாறுபட்ட கதாபாத்திரங்களில் நடித்துள்ள அவர், நடிப்புக்கு முக்கியத்துவம் கொண்ட பல்வேறு கதாபாத்திரங்களில் ரசிகர்களின் கவனத்தை ஈர்த்துள்ளார். இந்நிலையில், 'டெக்ஸாஸ் டைகர்' திரைப்படத்தில் கமர்ஷியல் என்டர்டெய்னர் ஹீரோவாக ஹிருது ஹரூன் களமிறங்குகிறார் என்பதையே 'டைகரியன் ரோர்' பாடல் எடுத்துக் காட்டுகிறது.

முதல் பீட்டிலிருந்தே இந்தப் பாடலின் பிரம்மாண்டமான காட்சிகள், எனர்ஜிட்டிக்கான இசை மற்றும் வசீகரிக்கும் நடனம் என வண்ணமயமாக உருவாகியுள்ளது. பாடலின் ஒவ்வொரு காட்சியிலும் தனது நடிப்பால் ஹிருது ஹரூன் ரசிகர்களின் கவனத்தை முழுமையாக ஈர்க்கிறார். டைனமிக் பெர்கஷன் இசையும், பல அடுக்குகளைக் கொண்ட இசைக் கருவிகளின் பயன்பாடும் பாடலின் கொண்டாட்ட உணர்வை மேலும் அதிகரிக்கின்றன. ஓஷோ வெங்கட் படத்திற்கு இசையமைத்துள்ளார்.

முதல் சிங்கிளுக்குக் கிடைத்துள்ள இந்த அமோக வரவேற்பு, 'டெக்ஸாஸ் டைகர்' படத்தின் மீதான எதிர்பார்ப்புகளுக்கு மேலும் வலுசேர்த்துள்ளது. இந்தப் பாடலுக்கு கெலித்தி, தமிழ் ஆதவன் மற்றும் ஆ.பா.ராஜா ஆகியோர்



பாடல் வரிகளை எழுதியுள்ளனர். கெலித்தி மற்றும் தமிழ் ஆதவன் பாடலைப் பாடியுள்ளனர். ஓஷோ வெங்கட் இசையமைத்துள்ளார். இந்தத் திரைப்படத்தை செல்வ குமார் திருமாறன் எழுதி இயக்கியுள்ளார். யுகே ஸ்குவாட் நிறுவனம் சார்பில் பாலாஜி குமார், பார்த்திபன் குமார், செல்வ குமார் திருமாறன் மற்றும் சுஜித் ஆகியோர் இப்படத்தைத் தயாரித்துள்ளனர்.

இப்படத்தில் ஹிருது ஹரூன், சம்யுக்தா விஸ்வநாதன், ரோகிணி மொலெட்டி, அந்தோணி தாசன், சாச்சனா நமிதாஸ், ரமேஷ் திலக், பார்த்திபன், வஃபா கதீஜா, பீட்டர் கே, சம்யுக்தா சண்முகநாதன் உள்ளிட்ட பலர் நடித்துள்ளனர்.

படத்தின் தொழில்நுட்பக் குழுவில் இசையமைப்பாளர் ஓஷோ வெங்கட், ஒளிப்பதிவாளர் விஷ்ணு மணி வடிவு, படத்தொகுப்பாளர் பிரவீன் ஆண்டனி மற்றும் கலை இயக்குநர் கே.பி. நந்து ஆகியோர் பணியாற்றியுள்ளனர்.

இந்தப் பாடல் மூலம் 'டெக்ஸாஸ் டைகர்' படத்தின் இசை புரமோஷன் மிகப் பெரிய அளவில் தொடங்கியுள்ளது. இதன் மூலம், விறுவிறுப்பும் உற்சாகமும் நிறைந்த சுவாரஸ்யமான திரையரங்க அனுபவத்தை ரசிகர்களுக்கு இந்தத் திரைப்படம் தரவிருக்கிறது.

## சீனாவில் பயங்கர நிலநடுக்கம்: நேபாளம் திரிசூலி ஆற்றில் வெள்ளப்பெருக்கு

சென்னை, 29 ஆகஸ்ட் 2026: சீனாவில் ஏற்பட்ட நிலநடுக்கத்தால் திபெத் அணை உடைந்ததை தொடர்ந்து, நேபாளத்தின் திரிசூலி ஆற்றில் வரலாறு காணாத வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளதால் மக்கள் அவசரமாக வெளியேற்றப்பட்டு வருகின்றனர். நேபாளத்தின் போதேகோசி ஆற்றில் ஏற்பட்ட கோர வெள்ளப்பெருக்கில் சிக்கி இதுவரை 469 பேர் உயிரிழந்துள்ள நிலையில், மாயமான 1,500க்கும் மேற்பட்டோரை தேடி வருவதாக போலீசார் அதிகாரப்பூர்வமாக தெரிவித்துள்ளனர். இந்த நிலையில், சீனாவின் தென்மேற்கு பகுதியில் அமைந்துள்ள சிச்சுவான் மாகாணத்தின் லாங்சாங் நகரில் ரிக்டர் அளவில் இன்று 5.1 ஆக பதிவான சக்தி வாய்ந்த நிலநடுக்கம் ஏற்பட்டது.

இதன் தீவிர தாக்கத்தால், எல்லைப் பகுதியான திபெத் பகுதியில் இருந்த அணை மீண்டும் திடீரென உடைந்தது. இதனால் அங்கிருந்து பெருக்கெடுத்து ஓடிவரும் அதிகளவிலான தண்ணீர் காரணமாக, நேபாளத்தின் திரிசூலி ஆற்றில் நீர்மட்டம் அபாயகரமான அளவுக்கு மளமளவென உயர்ந்து வருகிறது. இதையடுத்து திரிசூலி மற்றும் நுவாகோட்



பகுதி மக்கள் உடனடியாக பாதுகாப்பான இடங்களுக்கு செல்லுமாறு போலீசார் அவசர எச்சரிக்கை விடுத்து வெளியேற்றி வருகின்றனர்.

அங்கு நடந்து வந்த திரிசூலி-ரசுகா சாலை சீரமைப்பு உள்ளிட்ட அனைத்து கட்டுமானப் பணிகளும் உடனடியாக நிறுத்தப்பட்டு, வாகனங்கள் திருப்பி அனுப்பப்பட்டுள்ளன. இதுகுறித்து நேபாள போலீஸ் அதிகாரி பி.சவுத்ரி கூறுகையில், 'ஆற்றில் நீர்மட்டம் வேகமாக உயர்ந்து வருவதால் அனைத்து பணிகளும் நிறுத்தப்பட்டுள்ளன. மீட்புப் பணியில் இருந்த வாகனங்கள் அனைத்தும் திருப்பி வரவழைக்கப்பட்டு, மக்கள் பாதுகாப்பான இடங்களுக்கு மாற்றப்பட்டு வருகின்றனர். இனிவரும் நேரங்களில் இதைவிட மிக மோசமான வெள்ளப்பெருக்கு ஏற்பட வாய்ப்புள்ளதால் தீவிர எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது' என்று கூறினார்.

## பான் இந்தியா நட்சத்திர முகமாக ஃபோர்ப்ஸ் இந்தியா அட்டை படத்தை அலங்கரிக்கும் ஐகான் ஸ்டார் அல்லு அர்ஜுன்!

சென்னை, 29 ஆகஸ்ட் 2026: தேசிய விருது பெற்ற ஐகான் ஸ்டார் அல்லு அர்ஜுன், ஃபோர்ப்ஸ் இந்தியாவின் மதிப்பு மிக்க ஷோஸ்டாப்பர்ஸ் 2026 சிறப்புப் பதிப்பின் அட்டைப்பட நட்சத்திரமாக இடம்பெற்றுள்ளார். இந்திய சினிமாவின் மிகவும் செல்வாக்கு மிக்க நட்சத்திரங்களில் ஒருவரான அவரது திரைப்பயணத்தில் இது மற்றுமொரு முக்கிய மைல்கல்லாக அமைந்துள்ளது.

தனித்துவமான திரை ஆளுமை, பான் இந்தியா அளவிலான ரசிகர்கள் வரவேற்பு மற்றும் உலகளவிலான அங்கீகாரம் ஆகியவற்றின் மூலம், அல்லு அர்ஜுன் பிராந்திய சினிமாவின் எல்லைகளைக் கடந்து தாக்கத்தை ஏற்படுத்தும் நட்சத்திர நடிகராக உருவெடுத்துள்ளார். தெலுங்கு சினிமாவில் தொடங்கிய அவரது பயணம், இன்று தேசிய அளவிலும் சர்வதேச அளவிலும் அங்கீகரிக்கப்பட்ட உச்ச நட்சத்திரமாக உள்ளார். இது இந்திய சினிமாவின் மாறிவரும் சூழலையும் பிரதிபலிக்கிறது.

'புஷ்பா: தி ரைஸ்' திரைப்படத்தின் பிரம்மாண்ட வெற்றியிலிருந்து, சாதனை படைத்த 'புஷ்பா2: தி ரூல்' திரைப்படத்தின் தாக்கம் வரை, பல்வேறு மொழிகள் மற்றும் எல்லைகளைக் கடந்து ரசிகர்களுடன் வலுவான தொடர்பை அல்லு அர்ஜுன் உருவாக்கியுள்ளார்.

அவரது திரைத்துறை சாதனைகளைத் தாண்டி, கலாச்சாரம், முன்னணி பிராண்டுகள் மற்றும் உலகளாவிய பொழுதுபோக்கு துறையிலும் அவரது



செல்வாக்கு விரிவடைந்துள்ளது. அவரது தனித்துவமான ஸ்டைல், ஐகானிக் மேனரிசம் மற்றும் ரசிகர்கள் பட்டாளம் ஆகியவை, இன்றைய இந்திய சினிமாவின் முகங்களில் ஒருவராக அவரை மாற்றியுள்ளன.

ஃபோர்ப்ஸ் இந்தியாவின் 'ஷோஸ்டாப்பர்ஸ் 2026' அட்டைப்படத்தில் இடம்பெற்றிருப்பது, அவரது நட்சத்திர அந்தஸ்தையும் உலகளாவிய மேடையில் இந்திய நட்சத்திரங்களின் வளர்ந்து வரும் செல்வாக்கையும் எடுத்துக் காட்டுகிறது.

இந்த அட்டைப்படம் ஒரு நடிகராக அல்லு அர்ஜுன் பெற்ற வெற்றியை மட்டுமல்லாமல், சக்திவாய்ந்த கலாச்சார அடையாளமாக அவர் மாறியுள்ளதையும் கொண்டாடுகிறது.

இந்திய சினிமாவையும் தன் நட்சத்திர அந்தஸ்தையும் அடுத்த நிலைக்கு எடுத்துச் செல்லும் வகையிலான படங்களைத் தேர்ந்தெடுத்து நடித்து வரும் ஐகான் ஸ்டார் அல்லு அர்ஜுனுக்கு, ஃபோர்ப்ஸ் இந்தியா ஷோஸ்டாப்பர்ஸ் 2026 அட்டைப்படம் அவரது பயணத்தில் மற்றுமொரு முக்கிய மைல்கல் சாதனையாக அமைந்துள்ளது.

## திரையரங்குகளில் செப்டம்பர் 17 ஆம் தேதி வெளியாகும் 'என்ன விலை' திரைப்படத்தின் மூலம் திரையுலகில் 25 ஆண்டுகளை நிறைவு செய்யும் நடிகர் கருணாஸ்!

சென்னை, 29 ஆகஸ்ட் 2026: நடிகர் கருணாஸ், தமிழ் திரையுலகில் தனது 25 ஆண்டுகால பயணத்தை நிறைவு செய்யும் தருணத்தில் வெளியாக விருக்கும் 'என்ன விலை' திரைப்படம் அவரது திரைப்பயணத்தில் முக்கியமான மைல்கல். நகைச்சுவை, குணச்சித்திரம் மற்றும் உணர்வுப்பூர்வமான கதாபாத்திரங்கள் என பல்வேறு பரிமாணங்களில் தனது நடிப்புத் திறமையை வெளிப்படுத்தியுள்ள கருணாஸ், 'என்ன விலை' திரைப்படம் தனது திரைப் பயணத்தில் மிகவும் சிறப்பான இடத்தைப் பெற்றுள்ளதாக தெரிவித்துள்ளார்.

படம் குறித்து நடிகர் கருணாஸ் பகிர்ந்து கொண்டதாவது, "திரையுலகில் நான் 25 ஆண்டுகளை நிறைவு செய்யும் இந்த நேரத்தில், 'என்ன விலை' திரைப்படம் எனக்கு கிடைத்திருப்பது மறக்க முடியாத ஒன்று. உண்மையாக சொல்வதென்றால், கடந்த 25 ஆண்டுகளாக இப்படியொரு படத்திற்காகவும், இப்படிப்பட்ட ஒரு படக்குழுவிற்காகவும் நான் காத்திருந்தேன். இயக்குநர் சஜீவ் பழூர் என்னிடம் கதை சொன்னபோது, உடனே நடிக்க ஒப்புக் கொண்டேன். இது அழகான மற்றும் உணர்வுப்பூர்வமான கதை. ஒட்டுமொத்த படக்குழுவினரும் மிகச் சிறப்பான பணியைச் செய்துள்ளனர். விருதுகளும், திரைப்பட விழாக்களில் கிடைக்கும் அங்கீகா ரங்கள் ஊக்கமளித்தாலும், ஒரு திரைப் படம் மக்களுக்கானது. சாதாரண மனிதர்களின் வாழ்க்கை, அவர்களின் போராட்டங்கள், சுயமரியாதை மற்றும் நம்பிக்கை ஆகிய வற்றைப் பேசும் இப்படம் பார்வையாளர்களின் மனதைத் தொடும் என்று நம்புகிறேன்".

தேசிய விருது பெற்ற திரைப்பட இயக்குநர் சஜீவ் பழூர் எழுதி இயக்கியுள்ள 'என்ன



விலை' திரைப்படத்தை ஜித்தேஷ் விஸ்வம்பரன் மற்றும் அனுகோபால் வேணுகோபாலன் ஆகியோர் கலாமயா சினிவெர்ஸ் நிறுவனத்தின் சார்பில் தயாரித்துள்ளனர்.

இப்படத்தில் நிமிஷா சஜயன், கருணாஸ், விஜயலட்சுமி, பூர்ணிமா பாக்யராஜ், ஒய்.ஜி. மகேந்திரன், மொட்டை ராஜேந்திரன், நிழல்கள் ரவி, சித்தா தர்ஷன், மோகன் ராம், சேத்தன் குமார், கவிதாலயா கிருஷ்ணன், கமலேஷ், கோலி சோடா பாண்டி, ஜே.எஸ். கவி, சுவாமிநாதன், தீபா சங்கர், கவி நக்கலைட்ஸ் உள்ளிட்ட பலர் நடித்துள்ளனர்.

படத்தின் தொழில்நுட்பக் குழுவில் ஒளிப்பதிவாளராக அல்பி ஆண்டனி, இசையமைப்பாளராக சாம் சி.எஸ்., படத் தொகுப்பாளராக ஸ்ரீஜித் சாரங் மற்றும் ஒலி வடிவமைப்பாளராக தபஸ் நாயக் ஆகியோர் பணியாற்றியுள்ளனர்.

பல்வேறு சர்வதேச திரைப்பட விழாக்களில் திரையிடப்பட்டு பாராட்டுகளைப் பெற்றுள்ள 'என்ன விலை' திரைப்படம், இந்த வருடம் செப்டம்பர் மாதம் 17 ஆம் தேதி திரையரங்குகளில் வெளியாகிறது.



# வேகமாக விறுவிறுப்பாக நடைபெறும் 'அரசன்' படப்பிடிப்பு!

சென்னை, 29 ஆகஸ்ட் 2026: சிலம்பரசன் டிஆர் நடிப்பில், வெற்றிமாறன் இயக்கத்தில், கலைப்புலி எஸ். தாணு தயாரிப்பில் உருவாகி வரும் 'அரசன்' திரைப்படத்தின் படப்பிடிப்பு சென்னையில் விறுவிறுப்பாக நடைபெற்று வருகிறது.

தற்போது சென்னை தரமணியில் பிரம்மாண்டமாக அமைக்கப்பட்டுள்ள அரங்கில் படப்பிடிப்பு நடைபெற்று வரும் நிலையில், எவ்வித தொய்வும் இல்லாமல் திட்டமிட்டபடி படப்பிடிப்பு வேகமாக முன்னெடுக்கப்பட்டு வருகிறது.

இந்நிலையில், படப்பிடிப்பு தளத்தில் சிலம்பரசன் டிஆர், இயக்குநர் வெற்றிமாறன் மற்றும் இசையமைப்பாளர் அனிருத் ஆகிய மூவரும் சந்தித்து, படத்தின் பணிகள் குறித்து கலந்துரையாடியுள்ளனர்.



ரசிகர்கள் பெரிதும் எதிர்பார்க்கும் இந்த மூவரின் கூட்டணி, 'அரசன்' படத்திற்கான எதிர்பார்ப்பை மேலும் அதிகரித்துள்ளது.

'வடசென்னை' யுனிவர்ஸுடன் தொடர்புடைய கதைக்களத்தில் உருவாகி வரும் 'அரசன்' படத்தில், சிலம்பரசன் ஜிஸி உடன் ஆண்ட்ரியா, சமுத்திரக்கனி, கிஷோர் உள்ளிட்ட பலர் நடித்து வருகின்றனர்.

சிலம்பரசன் டிஆர் - வெற்றிமாறன் - அனிருத் என ரசிகர்கள் ஆவலுடன் எதிர்பார்க்கும் இந்த கூட்டணி இணைந்திருப்பதே ஒரு மிகப்பெரிய ட்ரீட்டாக அமைந்துள்ள நிலையில், 'அரசன்' படத்தின் அடுத்தடுத்த அப்டேட்கள் விரைவில் வெளியாகும் என எதிர்பார்க்கப்படுகிறது.

படப்பிடிப்பு எந்தவித இடையூறும் இன்றி தொடர்ந்து வேகமாக நடைபெற்று வருவதால், 'அரசன்' மீதான எதிர்பார்ப்பு ரசிகர்கள் மத்தியில் நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது.

# 'மொத ராத்திரி' தேவியாக மனம் கவர்ந்த பானுப்பிரியா - வெற்றிமாறன், மாரி செல்வராஜ், தனுஷ் படங்களில் அடுத்தடுத்து!

சென்னை, 29 ஆகஸ்ட் 2026: சமீபத்தில் வெளியாகி பெரும் வெற்றி பெற்ற 'மொத ராத்திரி' திரைப்படத்தில் தேவி கதாபாத்திரத்தில் நடித்து கவனம் ஈர்த்தவர் நடிகை பானுப்பிரியா. சிறுவயதில் இருந்தே சினிமாவில் நடிக்க வேண்டும் என கனவு கண்டவர் லயோலா கல்லூரியில் விஸ்காம் முடித்திருக்கிறார். பக்ருதீன் மாஸ்டர் நாடகக்குழுவில் இணைந்தவர் அங்கிருந்து முன்னணி மீடியா நிறுவனங்களில் வேலை செய்து பின்பு சினிமாவில் நுழைந்தார்.

தனது சினிமா பயணம் பற்றியும் 'மொத ராத்திரி' படம் குறித்தும் பானுப்பிரியா பகிர்ந்து கொண்டதாவது, "பக்ருதீன் சார் மூலமாக 'கூழாங்கல்' திரைப்படத்தில் நடிக்கும் வாய்ப்பு கிடைத்தது. அந்த திரைப்படம் பல சர்வதேச விருதுகளை வாங்கி குவிக்கும் என அப்போது நான் எதிர்பார்க்கவில்லை. என் கரியரில் அடுத்த நிலைக்கு போகும் வாய்ப்பாக 'தாய் கிழவி' படம் அமைந்தது. இப்போது 'மொத ராத்திரி' படத்தில் பக்ஸ் சாரின் மனைவி தேவி கதாபாத்திரத்தில் நடித்திருக்கிறேன். பலரிடமும் பாராட்டுகளை இந்த கதாபாத்திரம் பெற்று தந்துள்ளது.



அடுத்து வெற்றிமாறன் சாரின் 'ராஜன் வகையறா' படத்தில் கிஷோர் சார் மனைவி நடித்து வருகிறேன். இதுமட்டுமல்லாமல், சந்தானம் சார் கதாநாயகனாக நடிக்கும் 'லவ் பைட்', 'அமரன்' பட இயக்குநர் ராஜ்குமார் பெரியசாமி-தனுஷின் 'ஓம்' திரைப்படம், இயக்குநர் மாரி செல்வராஜ் இயக்கத்தில் ஒரு படம் என நடித்து வருகிறேன்.

பெரிய இயக்குநர்கள் படத்தில் நானும் ஒரு அங்கம் என்பது மகிழ்ச்சியாக உள்ளது" என்கிறார்.

# புதுதில்லியில், இந்தியா-குவைத் கூட்டுப் பாதுகாப்புக் குழுக் கூட்டம் நடைபெற்றது

சென்னை, 29 ஆகஸ்ட் 2026: இந்தியா-குவைத் கூட்டுப் பாதுகாப்புக் குழுவின் முதல் கூட்டம் இன்று (2026 ஆகஸ்ட் 28) புதுதில்லியில் நடைபெற்றது.

ராணுவப் பயிற்சிகள், ராணுவ மருத்துவம், பாதுகாப்புத் ஆராய்ச்சி - மேம்பாடு உள்ளிட்ட பல்வேறு துறைகளில் இருதரப்பு ஒத்துழைப்பை மேலும் வலுப்படுத்த இரு நாடுகளும் ஒப்புக் கொண்டன.

2024 டிசம்பரில் பிரதமர் திரு நரேந்திர மோடி குவைத்திற்கு மேற்கொண்ட பயணத்தின்போது கையெழுத்திடப்பட்ட, இரு தரப்புப் பாதுகாப்பு ஒத்துழைப்பு குறித்த புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் சுட்டிக் காட்டப்பட்டுள்ள நோக்கங்களைச் செயல்படுத்துவதை நோக்கிய ஒரு முக்கியப் படியாக



கூட்டு பாதுகாப்புக் குழுவின் முதல் கூட்டம் அமைந்தது.

இந்தியாவும் குவைத்தும், பாரம்பரியமான நீண்ட நட்புறவைப் பேணி வருகின்றன. இரு நாடுகளுக்கும் இடையேயான தூதரக உறவுகள் 1962-ல் நிறுவப்பட்டன. டிசம்பர் 2024-ல் பிரதமர் திரு நரேந்திர மோடி குவைத்திற்கு மேற்கொண்ட பயணத்தின்போது, இந்த உறவு ஒரு உத்திசார் ஒத்துழைப்பாக மேம்படுத்தப்பட்டது.

# 'நோவா' - பேயா? அறிவியலா? காலத்தையே கேள்வி கேட்கும் திரைப்படமா?

சென்னை 29, ஆகஸ்ட் 2026: ராயல் ஃபார்ச்சுனா கிரியேஷன்ஸ் தயாரிப்பில், ரைசா வில்சன், துருவா, அத்விதி ஷெட்டி, சென்ராயன், ஹிரிதிகா பிஸ்வாஸ் மற்றும் "ஃபைனலி" சுவாதிகா நடிப்பில், மைலோ இயக்கத்தில் விரைவில் வெளிவரவிருக்கும் திரைப்படம் "நோவா"

பெயரே வித்தியாசமாக இருக்கிறதே! அதைப் பற்றி தெரிந்து கொள்ள இயக்குநர் மைலோவிடம் கேட்டபோது, தமிழ் சினிமாவில் திகில் என்றாலே பேய், பங்களா, பழிவாங்கல் என்ற வழக்கமான பாதையைத் தாண்டி, காலம், மனிதர்களின் நினைவுகள், அறிவியல் மற்றும் பயம் ஆகியவற்றை ஒன்றிணைத்து ஒரு வித்தியாசமான உலகத்தை உருவாக்க முயற்சி செய்திருப்பதாகக் கூறுகிறார்.

பார்வையாளர்களுக்கு பதில்களை உடனடியாக வழங்காமல், படம் முழுவதும் கேள்விகளைத் தொடர்ந்து எழுப்பிக் கொண்டே செல்லும் வகையில் திரைக்கதை அமைக்கப்பட்டுள்ளது.

"இந்தப் படத்தை ஒரு திகில் திரைப்படமாக மட்டும் பார்க்கக் கூடாது. பயத்தைப் பயன்படுத்தி ஒரு பெரிய மர்மத்தைச் சொல்லும் திரைப்படம் இது. பார்வையாளர்கள் படம் முடிந்த பிறகும் சில கேள்விகளுடன் வெளியே வர வேண்டும் என்பது தான் எங்களுடைய நோக்கம்," என்கிறார் இயக்குநர் மைலோ.

சூரியனே இல்லாத ஒரு திரைப்படம்!

நோவாவின் மிகப் பெரிய காட்சியமைப்புச் சவால்களில் ஒன்று, படத்தின் எந்தக் காட்சியிலும் சூரிய ஒளி தெரியக்கூடாது என்பதுதான்.

இதற்காகவே படப்பிடிப்பின்போது கருமேகங்கள் சூழும் வரை காத்திருந்து பல காட்சிகளைப் படமாக்கியிருக்கிறார்கள்.

தொடர்ந்து 32 நாட்கள் நடைபெற்ற படப்பிடிப்பில், இயற்கைச் சூழலும் படக்குழுவினருக்கு மிகப்பெரிய சவாலாக இருந்திருக்கிறது.

முழுப் படப்பிடிப்பும் கேரளாவில் உள்ள மலைப்பகுதி கிராமம் ஒன்றில் நடைபெற்று, படப்பிடிப்புத் தளத்திற்குச் செல்வதே ஒரு சவாலாக இருந்ததாகத் தெரிவிக்கிறார்.

"அந்த இடத்திற்குச் செல்வதே மிகவும் கடினம். தினமும் யாருக்காவது அடிபடும் அளவுக்கு பாதை மிகவும் சிரமமானதாக இருந்தது. ஆனால் அந்த இடம்தான் கதைக்குத் தேவைப்பட்டது. அதனால் நடிகர்கள் முதல் தொழில்நுட்பக் கலைஞர்கள் வரை அனைவரும் மிகவும் கஷ்டப்பட்டுப் பணியாற்றினார்கள்," என்கிறார் மைலோ.

இந்தச் சிரமங்களுக்கெல்லாம் காரணம் ஒன்றுதான் - திரையில் அந்த உலகம் செயற்கையாகத் தெரியக் கூடாது என்பதற்காக. நோவாவில் பார்வையாளர்களின் அறிவாற்றல் மீது இயக்குநர்



மிகுந்த நம்பிக்கை வைத்திருப்பது படத்தின் மற்றொரு சிறப்பு.

"படத்தை ஆரம்பம் முதல் இறுதி வரை மிகவும் உன்னிப்பாகப் பார்க்க வேண்டும். பார்வையாளர்கள் மீது எனக்கு இருக்கும் நம்பிக்கையால், எதையும் பெரிதாக விளக்கிச் சொல்லவில்லை," என்கிறார் மைலோ. அதனால் படத்தில் வரும் ஒவ்வொரு சிறிய காட்சிக்கும், வசனத்திற்கும், கதாபாத்திரத்தின் பார்வைக்கும் கூட ஒரு காரணம் இருக்கலாம்.

படத்தின் உண்மையான மர்மம் என்ன என்பதை வெளிப்படுத்தாமல் இருப்பதையே படக்குழு விரும்புகிறது.

ஏனென்றால் நோவாவில் சில உண்மைகள் பார்வையாளர்களுக்கு சொல்லப்படுவதற்காக அல்ல... அவர்கள் கண்டுபிடிப்பதற்காகவே உருவாக்கப்பட்டுள்ளது. நோவா ஒரு குறிப்பிட்ட வகைத் திரைப்படத்திற்குள் மட்டும் அடங்கும் படமல்ல.

பேய், பிசாசு, அறிவியல் புனைவு, அமானுஷ்யம், விண்வெளி, வரலாற்றின் வெவ்வேறு காலகட்டங்கள் என பல வித்தியாசமான உலகங்கள் ஒன்றோடொன்று இணையும் வகையில் படம் உருவாக்கப்பட்டுள்ளது.

மேலும், பல வெளிமாநில நடிகர்கள் முக்கியமான சிறப்புத் தோற்றங்களில் நடித்துள்ளனர்.

ஆனால் இவற்றில் எதுவும் கதையின் முக்கியமான ரகசியங்களை வெளிப்படுத்தும் அளவிற்கு முன்கூட்டியே கூறப்படவில்லை.

"இந்தப் படத்தைப் பற்றி எல்லாவற்றையும் முன்கூட்டியே சொல்லிவிட்டால், நோவாவைப் பார்த்த அனுபவமே மாறிவிடும். அதனால் சில விஷயங்களைப் பார்வையாளர்களே திரையரங்கில் கண்டுபிடிக்க வேண்டும்,"

நோவாவில் ரைசா வில்சனின் கதாபாத்திரமும் மிகவும் வித்தியாசமானதாக இருக்கும்.

குறிப்பாக, ரைசாவின் கதாபாத்திரத்திற்கு ஒரு வசனம் கூட கிடையாது. ஆனால் வசனங்கள் இல்லாமலேயே பார்வை மற்றும் உடல் மொழியின் மூலம் அந்தக் கதாபாத்திரத்தின் இருப்பை உணர்த்தியிருக்கிறது. "ரைசாவை இந்தப் படத்தில் முற்றிலும் வேறு விதமாகப் பார்ப்பீர்கள். அவருக்கு வசனமே கிடையாது. ஆனால் அவருடைய பார்வையே நிறைய விஷயங்களைச் சொல்லும்," என்கிறார் மைலோ.

PASSPORT | MSME | PAN | AADHAAR
FSSAI | PATTA | LEGALHEIR
2,4 WHEELER INSURANCE
PROPERTY TAX, EB - NAME TRANSFER
STATE AND CENTRAL GOVT
AUTHORISED FRANCHISEE
ALL ONLINE SERVICES
இ-சேவை மையம்
ஸ்டார் ரெயின்போ சர்வீசஸ்
11, SOUTH PERUMAL KOIL STREET, VADAPALANI, CHENNAI - 600 026.
8148231942 / 8144337349
பொது இ-சேவை மையம்